2. மேற்படி பணியின் அவசியம் கருதி, குறைவான விலை விகிதம் அளித்துள்ள Jupitor Enterprise, ஈரோடு நிறுவனத்தின் விலை விகிதத்தை ஏற்று,நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 72** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 73**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்காக தேவைப்படும் தளவாட சாமன்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு 13.10.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 19.10.2022-இல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | விவரம் | Sri Vinayaka Control Technologies | Jupitor Enterpride | Sivaalik Rathinam Chemicals |
|---|---|---|---|---|
| 1 | கை கூட்டுமாறு | 36.96 | 33.60 | 39.2 |
| 2 | கால்வாய் கரண்டி | 413.28 | 375.20 | 420 |
| 3 | சிறிய மண்வெட்டி | 472.64 | 430.08 | 476 |
| 4 | வாங்கறுவால் | 492.80 | 448 | 497 |
| 5 | அறிவாள் | 234.08 | 212.80 | 237 |
| 6 | சிறிய கூட்டுமாறு | 320.32 | 291.20 | 324 |
| 7 | 3பல்கொக்கி கரண்டி | 603.68 | 548.80 | 610 |
| 8 | குப்பைஅகற்றும் கூடை | 462.56 | 420 | 464 |
| 9 | மின்னும் சட்டை | 308 | 280 | 336 |
| 10 | காட்டன் கையுறை | 43.68 | 39.20 | 47 |
| 11 | முககவசம் | 12.32 | 11.20 | 13.44 |
| 12 | கருப்பு பினாயில் | 98.56 | 72.80 | 101.92 |
| 13 | வெள்ளை பினாயில் | 73.92 | 67.20 | 78.4 |
| 14 | ஆசிட் | 73.92 | 56 | 68.32 |
| 15 | ரப்பர் கையுறை | 123.2 | 112 | 125.44 |
| 16 | மூக்கு முக கவசம் | 156.60 | 145.60 | 162.40 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் Jupitor Enterprise, ஈரோடு நிறுவனத்தின் விலை விகிதம் குறைவாக உள்ள விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும்,அனுமதிக்குவைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, குறைவான விலை விகிதம் அளித்துள்ள Jupitor Enterprise, ஈரோடு நிறுவனத்தின் விலை விகிதத்தை ஏற்று,நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 73**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 74**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17220/2017/ததொபி, நாள்.11.03.2022-இன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருமின் விளக்குகள் கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு சாலை பதிவேடு மற்றும் தெருமின் விளக்கு பதிவேடு தயார் செய்திட, வரைபடம் வரைதல், வார்டு வாரியாக வரைபடம் பிரித்தல், கலர் பிரிண்ட் எடுத்தல் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதியும், மேற்படி பணிகள் மேற்கொண்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், வரும் காலங்களில் சாலை பதிவேட்டின் அடிப்படையில் மட்டுமே சாலை பராமரிப்பு பணிக்கு மான்யம் வழங்கப்படவுள்ளதாலும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை, நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 74**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 75**

இந்நகராட்சியில் சாலை உருளை துலக்குநராக பணிபுரிந்து சுய விருப்ப ஓய்வில் சென்ற்ற திரு.பெ.சிவசுப்பிரமணியன் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதி மன்ற அவமதிப்பு வழக்கு MD No.618/2022- இல் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி இந்நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாணை பெற்று தந்தமைக்காக இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.15,000/-த்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பட்டியல் தொகையினை நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 75**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 76**

இந்நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அரசாணை எண்.44 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை நாள்.11.03.2015-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு, செய்திதாள் விளம்பரம் வெளியிட்டதற்கு பிற்பகல் செய்திதாள் நிறுவனத்திடமிருந்து ரூ.9,975/- வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டதற்காக, கல் பப்ளிக்கேசன் நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 76**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 77**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டு பகுதிகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் கடை வாடகை (வரியற்ற இனம்) 2022-23ஆம் ஆண்டிற்கு நிலுவை மற்றும் நடப்பு தொகைகள் வசூல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படியும், இந்நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணி 100% மேற்கொள்ள ஏதுவாக, மேற்படி வரியினங்களை செலுத்தக் கோரி நகர்பகுதி முழுவதும் ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் செய்வதற்கும், தீவிர வரி வசூல் பணியில் ஈடுபட வேண்டியுள்ளதால், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை ஆகியோரின் அறிவுரைகளின்படி, தீவிர வரி வசூல் பணியில் ஈடுபட வேண்டியுள்ளதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 77**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 78**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு பேட்டரி வாகனங்கள் 12 எண்ணம் பழுதடைந்து இயக்க இயலாமல் உள்ளது. மேற்படி 12 பேட்டரி வாகனம் அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு பொதுசுகதார நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும், மேற்படி வாகனப் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய, 05.12.2022-இல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது நகர்மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | EBoss Electrical Vehicle Manitanance, Tirupur | EV & Products Motors Pvt Ltd, Erode | Gandhi Motors Pvt Ltd, Chennai |
|---|---|---|---|---|
| 1 | பேட்டரி வாகனங்கள் பழுது நீக்கப் பணிகள் | 4,53,562 | 4,62,962 | 4,57,377 |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, ஈபாஸ், எலக்டரிக்கல் வெகிக்கில் தயாரிப்பாளர், கணியூர், திருப்பூர் என்பரின் விலை விகிதத்தினை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுசுகாதார நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 78**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 79</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு நகராட்சி பகுதியில் உள்ள 1 முதல் 18 வார்டுகளில் ஆங்காங்கே சேகரமான மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை அவசர கால பணியாக JCB வாகனம் மற்றும் டிப்பர் லாரி மூலம் அப்புறப்படுத்திடவும், மற்றும் மழைநீர் வடிகால் நீரை சீராக ஓட வழிவகை செய்திடவும், கழிவுநீர் வாய்க்கால் மண் குப்பைகளை அப்புறப்படுத்திடவும், பொதுசுகாதார நலன் கருதியும், அவசரப் பணியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இதற்காக ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | Everest Earth Movers, Oddanchatram | Arun Priya Earth Movers, Oddanchatram | Shree Krishna Earth Movers, Oddanchatram |
|---|---|---|---|---|
| 1 | டிப்பர் லாரிமூலம் (1மணி நேரத்திற்கு) | 1900 | 2050 | 1800 |
| 2 | JCB இயந்திரம் மூலம் (1மணி நேரத்திற்கு) | 925 | 1020 | 960 |
| 3 | கிட்டாட்சி மூலம் (1மணி நேரத்திற்கு) | 1950 | 2000 | 1900 |
| 4 | டோசர் மூலம் (1மணி நேரத்திற்கு) | 920 | 940 | 800 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, Shree Krishna Earth Movers, Oddanchatram என்பரின் விலை விகிதத்தினை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மான எண். 79</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 80</u>**

அரசாணை (நிலை) எண்.373, நிதி (படிகள்)த் துறை, நாள்.26.12.2022, நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. பதிவு செய்யலாம்.
2. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சியில் பணி புரிந்து வரும் C மற்றும் D பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம் வழங்க, நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மிகை ஊதியம் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மான எண். 80</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 81**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.35945/2022/EA2/SWM-8, நாள்.10.01.2023-இன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக தரம் பிரித்து சேகரம் செய்து நுண் உர செயலாக்க மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு சேர்க்க டன் ஒன்றிற்கு ரூ.5,037.85/- என நிர்ணயம் செய்து தகுதியான தனியார் ஒப்பந்த நிறுவனத்தை ஆண்டு ஒன்றிற்கு ரூ.260.61 இலட்சம் என மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய கீழ்க்கண்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு, வந்துள்ள கடிதம் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | நகரில் உருவாகும் குப்பை அளவு | 11.90(TPD) |
| 2 | டன் ஒன்றுக்கான தொகை | ரூ.5,037.85/- |
| 3 | மதிப்பீட்டின்படி நாள் ஒன்றுக்கான அடிப்படை தொகை | ரூ.0.60 இலட்சம் |
| 4 | மதிப்பீட்டின்படி ஆண்டு ஒன்றுக்கான அடிப்படை தொகை | ரூ.219.00 இலட்சம் |
| 5 | சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் தொழிலாளர் நல நிதி (18% + 1%) | ரூ.41.61 இலட்சம் |
| 6 | ஆண்டு ஒன்றுக்கான மொத்த மதிப்பீட்டு தொகை | ரூ.260.61 இலட்சம் |

மேற்காணும் உத்தரவின்படி, இந்நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி சேகரமாகும் 11.90 டன் குப்பையினை தேவையான பணியாளர்கள் மற்றும் வாகனங்களை பயன்படுத்தி குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்யும் பணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு தகுதியான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.260.61 இலட்சத்திற்கு ஆகும் செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை வருவாய் நிதி மற்றும் 15th CFC, SWM Tied மான்யத்திலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.735/2022/எச்1)

**தீர்மான எண். 81**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 82**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17220/2017/ததொபி, நாள்.11.03.2022-இன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருமின் விளக்குகள் கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு சாலை பதிவேடுகள் மற்றும் தெருமின் விளக்கு பதிவேடுகள் தயாரிக்க வரைபடம் வரைதல், வார்டு வாரியாக வரைபடம் பிரித்தல், கலர் பிரிண்ட் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள, 04.11.2022-இல் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று, 11.11.2022 அன்று விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் | என்.எம்.கே கன்சல்டன்சி, ஒட்டன்சத்திரம் | இ.எஸ் கன்சல்டன்சி, ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | வரைபடம் வரைதல் (1-க்கு) | 12000 | 13000 | 12500 |
| 2 | வார்டு வாரியாக வரைபடம் பிரித்தல் | 1000 | 1150 | 1100 |
| 3 | A0 கலர் பிரிண்ட்(1-க்கு) | 1800 | 2000 | 1900 |
| 4 | A1 கலர் பிரிண்ட்(1-க்கு) | 1500 | - | - |
| 5 | A2 கலர் பிரிண்ட்(1-க்கு) | 1300 | 1500 | 1400 |
| 6 | A3 கலர் பிரிண்ட்(1-க்கு) | 300 | 400 | 350 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | A04 கலர் பிரிண்ட்(1-க்கு) | 30 | 45 | 35 |
| 8 | ஸ்பைரல் பைண்டிங் (1-க்கு) | 100 | 180 | 150 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்கவும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 82**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 83**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் (அறிவிப்பு எண்.21)-இன்படி, அரசாணை (4D)எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS & FC) துறை, நாள்.01.12.2022-இல் ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்த மார்க்கெட் புதிய ஒருங்கிணைந்த காய்கறி சந்தை வணிக வளாக கடைகள் அனைத்து வசதிகளுடன் கட்ட தொகை ரூ.2125.00 இலட்சம் (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23)இன் கீழ் (மான்ய நிதி ரூ.1063.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.1062.00 இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 23.12.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளதாலும், காந்தி மார்க்கெட் காய்கறி கமிஷன் மண்டி வியாபாரிகள் நலச்சங்கம் மூலமாக புதியதாக தங்கச்சியம்மாபட்டி ஊராட்சியில், 12 ஏக்கர் பரப்பளவில் புதிய கடைகள் கட்டப்பட்டு, அனைத்து கடைகளும் இடமாற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருகிறது. இந்நிலையில், மேற்படி சங்கம் மூலம் காந்தி தினசரி சந்தையில், காய்கறிகளுக்கான சுங்க வசூல் மற்றும் காந்தி மார்க்கெட் கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் முதலான குத்தகை உரிமை 01.04.2021 முதல் 31.03.2024 முடிய மூன்றாண்டுகளுக்கு பொதுஏலம் கோரப்பட்ட நிலையில், இரண்டாம் ஆண்டு 31.12.2022 உடன் குத்தகையினை ரத்து செய்யவும், 2022-2023-ஆம் ஆண்டுக்கு செலுத்திய குத்தகை தொகையில், 3 மாதங்களுக்கான குத்தகை தொகையினை திரும்ப வழங்க கேட்டு தலைவர், காந்தி மார்க்கெட் உரிமையாளர்கள் நலச்சங்கம் மற்றும் திரு.வீ.தனராஜ், குத்தகைதாரர், ஒட்டன்சத்திரம் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. காந்தி மார்க்கெட் காய்கறி கமிஷன் மண்டி வியாபாரிகள் நலச்சங்கம் மூலமாக புதியதாக தங்கச்சியம்மாபட்டி ஊராட்சியில், 12 ஏக்கர் பரப்பளவில் புதிய கடைகள் கட்டப்பட்டு, அனைத்து கடைகளும் இடமாற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருவதால், குத்தகை உரிமையினை 31.12.2022-ஆம் நாளுடன் ரத்து செய்ய தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்தும், மேற்படி இடத்தில் காந்த மார்க்கெட் புதிய ஒருங்கிணைந்த காய்கறி சந்தை வணிக வளாக கடைகள் கட்டுமான பணி துவங்கப்படவுள்ளதாலும், குத்தகையினை ரத்து செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண். 83**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 84**

ஒட்டன்சத்திரம் நகாட்சியில் வருவாய் தரத்தக்க இனங்களில், திண்டுக்கல் பழனி சாலை கி.மீ 129/0 முதல் 130/0 முடிய (தேசிய நெடுஞ்சாலை) உள்ள புளிய மரங்களின் மேல் மகசூல் பலன் குத்தகை உரிமையினை 01.04.2022 முதல் 31.03.2025 முடிய 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலையில், தற்போது நெடுஞ்சாலைத் துறை க(ம)ப, ஒட்டன்சத்திரம் அவர்களின் கடித ந.க.எண்.67/2022/அ2, நாள்.27.05.2022-இல் திண்டுக்கல் – கோயம்புத்தூர் – திம்மம் – பெங்களூர் சாலை (கைவிடப்பட்ட தே.நெ.எண்.209) ஒட்டன்சத்திரம் நகர் பகுதி – தமிழக முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டு 2021-2022 திட்டத்தின் கீழ் சாலை விரிவாக்க பணிகள் மேற்கொள்வதால், திண்டுக்கல் பழனி சாலை கி.மீ 129/0 முதல் 130/0 முடிய (தேசிய நெடுஞ்சாலை) உள்ள புளிய மரங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டதால், மேற்படி குத்தகை உரிமையினை 01.04.2023 முதல் இரத்து செய்து கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் காரணமாக மேல் மகசூல் தரும் புளிய மரங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளதால், நகர் பகுதியில் உள்ள வரியில்லா இனங்களில் இருந்து புளிய மரங்களின் மேல் மகசூல் பலன் குத்தகை உரிமையினை 01.04.2023 முதல் இரத்து செய்து கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 84**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 85**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பணிக்கு தேவையான பகிர்மானக் குழாய் மற்றும் பம்பிங் மெயின் குழாய்களுக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 85**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 86**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2022-2023-ஆம் ஆண்டுக்கு 1 முதல் 18 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் பழுது ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுவதால், பகிர்மான குழாய்களை அவ்வபோது சரிசெய்து சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 86**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 87**

தேசிய நெடுஞ்சாலைத் துறை க(ம)ப, ஒட்டன்சத்திரம் அவர்களின் கடித ந.க.எண்.67/2022/அ2, நாள்.27.05.2022-இல் திண்டுக்கல் – கோயம்புத்தூர் – திம்மம் – பெங்களூர் சாலை (கைவிடப்பட்ட தே.நெ.எண்.209) ஒட்டன்சத்திரம் நகர் பகுதி – தமிழக முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டு 2021-2022 திட்டத்தின் கீழ் சாலை விரிவாக்க பணிகள் மேற்கொள்வதால், திண்டுக்கல் பழனி சாலையில் உள்ள குடிநீர் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் அனைத்து தெரு விநியோக குழாய்களும் ஒரு சில அகற்றப்பட்டுவிட்டதால், குடிநீர் சீராக பொதுமக்களுக்கு வழங்க இயலவில்லை. எனவே, புதிய குடிநீர் குழாய்கள் கொள்முதல் செய்து மாற்றியமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் காரணமாக, குடிநீர் மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளதை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருநது மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 87**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 88**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவில் தைப்பூச திருவிழா 2023-ஆம் ஆண்டு 05.02.2023-ஆம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேணல் பந்தல், தற்காலிக கழிவறை, பொதுசுகாதார பயன்பாட்டிற்கான கிருமி நாசினிகள் கொள்முதல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்ச்சி தட்டிகள் முதலான பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.

2. பழனி பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளின் அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 88</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 89</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்க தொட்டிக்கு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேல் நிலைத் தொட்டிய்ல நீரேற்றம் செய்யப்படும் அளவினை அவ்வபோது அறிந்துகொள்ளும் வகையில் ஒலியுடன் கூடிய அளவு மானி பொருத்த ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.0.95 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வீணாவதை தடுக்கும் பொருட்டு ஒலியுடன் கூடிய அளவு மானி பொருத்தும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 89</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 90</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு 29.01.2023-இல் முடிவடைவதால், கீழ்க்கண்ட வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன எண் | தொகை |
|---|---|---|
| 1 | TN 94 Z 6286 | 18153 |
| 2 | TN 94 Z 6279 | 18153 |
| 3 | TN 94 Z 5613 | 18153 |
| 4 | TN 94 Z 6305 | 18153 |
| | மொத்தம் | 72612 |

மேற்கண்ட 4 வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு கால அட்டவணை புதுப்பிக்க வேண்டியுள்ளதால், The New India Assurance Co.Ltd, Dindigul நிறுவனத்திற்கு செலுத்தி புதுப்பித்துக்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 90</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 91**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் மற்றும் குடிநீர் வாகனம் தகுதி சான்று பெற கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது.

| வ. எண் | வாகன எண் | வாகன விவரம் TN 57 AW 5529 | வாகன விவரம் TN 57 R 4390 |
|---|---|---|---|
| 1 | பசுமை வரி | 1010 | 1515 |
| 2 | தகுதிச்சான்று கட்டணம் | 850 | 850 |
| 3 | மோட்டார் வாகனக் கட்டணம் | 8593 | 10815 |
| 4 | புகைச் சான்று கட்டணம் | 110 | 110 |
| 5 | வாகனங்களுக்கு கருவி பொருத்தும் வகையில் | 5100 | 5100 |
| \ | மொத்தம் | 15663 | 18390 |

மேற்கண்ட இரண்டு வாகனங்களுக்கு தகுதி சான்று பெற கட்டணமாக ரூ.34,053/- மட்டும் திரு.சி.ரவிசங்கர், துப்புரவு ஆய்வாளரால் தொகை செலுத்தப்பட்டது. அதனை அன்னார்க்கு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 91**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 92**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு நகர் எல்லைக்குள் அமைந்துள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2.0 திட்டம் மூலம் சின்னக் குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கழிப்பறை வெளிச்சுவர் மற்றும் கழிப்பறையின் தென்புறம் அமைந்துள்ள நுண்உரக்கிடங்கு சுற்றுச் சுவற்றிலும் திறந்த வெளியில் மலம் கழிப்பதினை தவிர்க்கும் விதமாக படங்கள் ,விழிப்புணர்வு வாசகங்களை சுவற்றில் எனாமல் பெயிண்டினால் வரைந்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டியுள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையினை உருவாக்கும் விதமாக படங்கள், விழிப்புணர்வு வாசகங்ள் வரைந்திட ஆகும் செலவினம் ரூ.35,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு 23.12.2022-இல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனம் பெயர் | சதுர அடி ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | சரண் ஆர்ட்ஸ், ஒட்டன்சத்திரம் | 50.00 |
| 2 | கருடா ஆர்ட்ஸ், ஒட்டன்சத்திரம் | 60.00 |
| 3 | சாமு ஆர்ட்ஸ், ஒட்டன்சத்திரம் | 70.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் சரண் ஆர்ட்ஸ், ஒட்டன்சத்திரம் என்பவரின் விலை விகிதத்தினை ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும்,

நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 92**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 93**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு ,நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள 10 எண்ணிக்கை பொதுக் கழிப்பிடங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கழிப்பறையிலும் ஏ3 அளவிளான ACRYLIC CARD BOARD , QR Code (Quick-Response-Bar Code) Mobile App-இல் பதிவு செய்து போர்டு அமைத்திடவும், அதன் விவரத்தினை தூய்மை இந்தியா திட்ட இணைய தளத்தில் பதிவிடவும் தெரிவிக்கப்பட்ட்டுள்ளதால் மேற்படி பணியினை மேற்கொண்ட வண்ணம் பிரிண்டர், பழனி நிறுவனத்திற்கு செலவினத் தொகை ரூ.35,000/- க்கு நகர்மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் பின்வருமாறு,

| வ.எண் | விலை விகிதம் | ஏ3 அளவிலான ஒரு கழிப்பிடத்தில் அமைத்திட கூலி உட்பட ரூ. |
|---|---|---|
| 1 | வண்ணம் பிரிண்டர்ஸ்,<br>71 புது தாராபுரம் ரோடு, பழனி | 3500 |
| 2 | விக்னேஷ் பிரிண்டர்ஸ்,<br>ஓம் அம்பிகா தியேட்டர் அருகில், தாராபுரம் சாலை | 3700 |
| 3 | அன்னை பிரிண்டர்ஸ்,<br>ராஜேந்திரன் ரோடு, பழனி, | 3900 |

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வண்ணம் பிரிண்டர், பழனி என்பவரின் விலை விகிதத்தினை ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும், நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 93**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள். 94**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணிகள் மேற்கொள்ளப்படும் கணினி வரி வசூல் மையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி இரசீதுகள் கையிருப்பு குறையாக உள்ளதால் ,வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி கணினி இரசீதுகள் 1 முதல் 100000 வரை திண்டுக்கல், தையல் மகளிர் எழுது பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் மூலம் அச்சடித்து பெற ஆகும் செலவீனம் ரூ.4.00 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

2. வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 94**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 95**

திரு.ப.கனகராஜ், 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்படும் கூட்டப் பொருள்.

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7-வது வார்டு தும்மிச்சம்பட்டி புதூர் பகுதியில் சேதமடைந்த பேவர் பிளாக் சாலை மற்றும் இணைப்பு சாலை சீரமைப்பு பணி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.75 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 95**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 96**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18-வது வார்டு ஏ.எம்.கே நகர் மற்றும் காவேரி நகர் விரிவாக்க பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 96**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 97**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18-வது வார்டு ஏ.எம்.கே நகர் மற்றும் காவேரி நகர் விரிவாக்க பகுதிகளில் புதியதாக வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.75 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 97</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 98</u>**

காப்பிலியபட்டி உரக்கிடங்கு மற்றும் நகரின் முக்கிய சாலைகளில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் ஆடு, மாடுகளால் சேதமாகாமல் தடுக்க பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. TNUES 2021-2022-ஆம் நிதியாண்டில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை பாதுகாப்பாக வளர்த்திட வேண்டியுள்ளதால், பாதுகாப்பு வேலி அமைத்திட ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் ஒதுக்கீடு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 98</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 99</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 8 வது வார்டு தும்மிச்சம்பட்டி வடக்கு பகுதியில் உள்ள பெண்கள் பொதுக்கழிப்பிடம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பொதுக்கழிப்பிடத்தின் பேஸ்மெண்ட் லெவலை உயர்த்தி புதிதாக வாட்டர்குலோஸ்ட்டுகள், கதவுகள், மேற்கூரை, செப்டிக் டேங்க் மராமத்து மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை.ரூ.9.75 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பகுதி பெண்களின் பொதுசுகாதார நலன் கருதியும், திறந்த வெளியில் மலம் கழித்தலை முற்றிலுமாக ஒழிக்க வேண்டிய நிலையில், மேற்படி மதிப்பீடு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 99</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 100**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் 2451 தெருமின் விளக்குகள் உள்ளது அதில் ஏற்படும் பழுதுகளை சரி செய்துவர உதிரி சாமன்கள் கையிருப்பு போதிய அளவில் இருப்பு இல்லை. எனவே, தெருமின் வளக்கு பயன்பாட்டின் அவசியம் கருதி உதிரி சாமான்கள் கொள்முதல் செய்திட ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி, மேற்படி பணி மேற்கொண்டு வரவும் , அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 100**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 101**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் அழுத்த சுத்திகரிப்பு இயந்திரத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் நீரேற்று நிலைய வளாகத்திற்குள் தேங்கி நின்று சுகாதாரக்கடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, கழிவுநீரை வெளியேற்றும் வகையில் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ள பகுதியிலிருந்து ஆற்றுப்படுகை வரை பைப் லையன் அமைத்து வெளியேற்ற ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 101**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 102**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்தி மார்க்கெட் வடபுறம் உள்ள மழைநீர் செல்லும் சாலையின் தடுப்பு சுவர் தொடர் மழை காரணமாக இடிந்து விழுந்துவிட்டது. இதனால், வாகன போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் விபத்து ஏற்படுத்தும் வகையில் அபாய கரமாக உள்ளதை பாதுகாப்பு கருதி மணல் மூடைகள் மூலம் நிரப்பி பாதுகாப்பு வேலி அமைத்திட ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. தினசரி நாளிதழ்களில் இதுகுறித்து பொதுமக்களால், புகார் தெரிவிக்கப்பட்டு வருவதாலும், அவசியம் கருதியும் அனுமதிக்கலாம்.

2. காந்தி மார்க்கெட் பகுதியில் வருகை தரும் பொதுமக்களுக்கு கனரக வாகன போக்குவரத்திற்கு பாதுகாப்பு நலன் கருதி, அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.102**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 103**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கான கட்டணங்களை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்க நகர்மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| வ. எண் | தாரணை விவரம் | தற்போதைய கட்டண விவரம் (ரூ.பை) | புதிய கட்டண விவரம் (ரூ.பை) |
|---|---|---|---|
| | **காந்தி தினசரி சந்தை சுங்க வசூல்** | | |
| 1 | பாரமேற்றிய லாரி ஒவ்வொரு தடவைக்கும் | 40.00 | 100.00 |
| 2 | பாரமேற்றிய மினி லாரி/ டெம்போ/ டிராக்டர் ஒவ்வொரு தடவைக்கும் | 20.00 | 50.00 |
| 3 | பாரமேற்றாத லாரி ஒவ்வொரு தடவைக்கும் | 10.00 | 20.00 |
| 4 | பாரமேற்றாத மினி லாரி/ டெம்போ/ டிராக்டர் ஒவ்வொரு தடவைக்கும் | 10.00 | 20.00 |
| 5 | பாரமேற்றிய இரட்டை மாட்டு வண்டி ஒவ்வொரு தடவைக்கும் | 10.00 | 20.00 |
| 6 | பாரமேற்றிய ஒற்றை மாட்டு வண்டி ஒவ்வொரு தடவைக்கும் | 10.00 | 20.00 |
| 7 | பாரமேற்றாத இரட்டை மாட்டு வண்டி ஒவ்வொரு தடவைக்கும் | 5.00 | 10.00 |
| 8 | பாரமேற்றிய கை வண்டி 1-க்கு | 5.00 | 10.00 |
| 9 | குதிரை மேல் ஏற்றியோ அல்லது தலைச்சாரம் மூலமோ கொண்டு வரும் ஒவ்வொரு பொதிக்கும் | 5.00 | 10.00 |
| 10 | தக்காளி கூடை மற்றும் பெட்டி 1-க்கு | 1.00 | 5.00 |
| 11 | சிறிய – பெரிய வெங்காயம் மற்றும் காய்கறிகள் மூடை 1-க்கு | 5.00 | 10.00 |
| 12 | காலிபிளவர் 100 பூ கொண்ட லாட் ஒன்றுக்கு | 5.00 | 10.00 |
| 13 | மேற்கண்ட இனங்கள் தவிர்த்த இதர இனங்கள் மூடை 1-க்கு (பல்வகை) | 5.00 | 10.00 |
| | **வியாழக்கிழமை கூடும் வாரச்சந்தை சுங்க வசூல்** | | |
| 1 | ஆடு, பன்றி ஒவ்வொன்றுக்கும் | 10.00 | 25.00 |
| 2 | கோழி, வாத்து ஒவ்வொன்றுக்கும் | 5.00 | 10.00 |
| 3 | பதனிடப்பட்ட தோல் ஒவ்வொன்றுக்கும் | 10.00 | 20.00 |
| 4 | பதனிடப்படாத தோல் ஒவ்வொன்றுக்கும் | 10.00 | 20.00 |
| 5 | பதனிடப்படாத மாட்டு தோல், எருமைத் தோல் ஒவ்வொன்றுக்கும் | 20.00 | 40.00 |
| 6 | சர்க்கரை, வெல்லம், தானியம், பருப்பு வகை, ஜவுளி, பாக்கு, தேங்காய் பால், பருத்திகொட்டை, வெண்ணெய் டின், கயிறு தலைச்சுமை ஒவ்வொன்றுக்கும் | 5.00 | 10.00 |
| 7 | சர்க்கரை, வெல்லம், தானியம், பருப்பு வகை, ஜவுளி, பாக்கு, தேங்காய் பால், பருத்திகொட்டை, வெண்ணெய் டின், கயிறு ஒவ்வொரு மூடைக்கும் | 5.00 | 10.00 |
| 8 | வெற்றிலை கூடை, காய்கறி வகை, விளக்குமாறு தலைச்சுமை ஒன்றுக்கு | 5.00 | 10.00 |
| 9 | பாரம் ஏற்றிய சைக்கிள் வண்டி ஒவ்வொரு தடவைக்கும் | 5.00 | 10.00 |
| | **ஞாயிற்று கிழமை கூடும் வாரச்சந்தை சுங்க வசூல்** | | |
| 1 | சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு தடவைக்கும் விற்பனை ஒழுங்கானது என்று அத்தாட்சி கொடுக்க (ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்க எத்தகையதாயினும்) | 10.00 | 50.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | எருது, பசு, குதிரை, எருமை, கழுதை ஒவ்வொன்றுக்கும் | 20.00 | 100.00 |
| 3 | பால் ஊட்டும் கன்றுக்குட்டி ஒவ்வொன்றுக்கும் | 10.00 | 50.00 |
| | **பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் முருக்கு விற்பனை** | | |
| 1 | தட்டு ஒன்றுக்கு கட்டணம் | 50.00 | 75.00 |
| | **பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் இஞ்சி மிட்டாய் விற்பனை** | | |
| 1 | தட்டு ஒன்றுக்கு கட்டணம் | 50.00 | 75.00 |
| | **பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் பழங்கள் விற்பனை** | | |
| 1 | தட்டு ஒன்றுக்கு கட்டணம் | 50.00 | 75.00 |

நகராட்சியின் தற்போதைய நிதி நிலை மற்றும் எதிர்காலத்தில் இந்நகராட்சி பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை தொய்வின்றி ஏற்படுத்தி கொடுக்க நகராட்சி வருவாயினை பெருக்க வேண்டிய காரணத்தினால், மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ள தற்போதைய கட்டணத்திலிருந்து புதிய கட்டணங்களை 01.04.2023 முதல் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் தற்போதைய நிதி நிலை மற்றும் எதிர்காலத்தில் இந்நகராட்சி பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்ய, வருவாய் நிதி நிலை உயர்வு தவிர்க்க இயலாததாக உள்ளதால், மேற்கண்ட கட்டணம் உயர்வு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு மாவட்ட அரசிதழ்களில் வெளியீடு செய்து நடைமுறைப்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.103**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 104**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேரூந்து நிலையத்தில் புதிய கடைகள் 1 முதல் 13 முடிய உள்ள கடைகள் கட்டண கழிப்றை மற்றும் உணவு விடுதி உரிமையாளர்களால் பேரூந்து நிலையத்தில் சாலை பராமரிப்பு பணி நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டது, 05.07.2022 ஆம் நாள் முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் மற்றும் பொதுமக்கள் அனுமதிக்கப்படாததால் தாங்கள் கடைகளை பூட்டி வைத்திருந்ததாகவும் சாலை அமைக்கும் பணி முடிவுற்று 01.12.2022 ஆம் நாள் முதல் பேரூந்து நிலையம் மீண்டும் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டு பேருந்துகள் மற்றும் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டார்கள் இந்நிலையில் 05.07.2022 ஆம் நாள் முதல் 30.11.2022 ஆம் நாள் வரை 5 மாதங்கள் வியாபாரம் செய்யாமல் பூட்டி வைக்கப்பட்டிருந்த தங்களது பேரூந்து நிலைய புதிய கடைகள் 1 முதல் 13 முடிய உள்ள கடைகள் கட்டண கழிப்றை மற்றும் உணவு விடுதி ஆகியவற்றிக்கு 5 மாதங்களுக்கான வாடகை தொகையினை தள்ளுபடி செய்யக்கோரி வரப்பெற்ற குத்தகைதாரர்களின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. பேரூந்து நிலை மேற்கு பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-2022 ன் கீழ் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக பேருந்துகள் மற்றும்

பொதுமக்கள் பேரூந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் அனுமதிக்கப்படாமல் பணிகள் நடைபெற்றது, மேற்கு பகுதியில் கடை எண் 1 முதல் 13 முடிய 13 கடைகளும் கட்டண கழிப்பறை 1எண்ணம் மற்றும் உணவு விடுதி 1எண்ணம் செயல்படாததால் குத்தகைதாரர்களின் வாடகை தொகை தள்ளுபடி செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.104**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் ; 105**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 10-வது வார்டு காந்தி மார்க்கெட் மேல்புறம் சாலை பகுதிகளில் வடிகால் இல்லாததால், போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையுள்ளதால், மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.80 இலட்சம் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.105**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் ; 106**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 3-வது வார்டு சங்குப்பிள்ளைபுதூர் குறுக்கு தெரு பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சம் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, பணி மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.106**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 107**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள 10 தள்ளு வண்டிகள் பழுதடைந்து இயக்க இயலாமல் உள்ளதால், மேற்படி தள்ளு வண்டிகளை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.1.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுசுகாதார நலன் கருதியும், பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், விலைப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 107**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 108**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள 10 தள்ளு வண்டிகள் பழுதடைந்து இயக்க இயலாமல் உள்ளதால், மேற்படி தள்ளு வண்டிகளை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .மேற்படி பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | சுபாசினி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சிவகங்கை | விஜய் லேத் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|
| 1 | 10 தள்ளு வண்டிகள் பழுது நீக்கம் செய்யும் பணி | 13000 | 23000 |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, சுபாசினி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சிவகங்கை என்பரின் விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்,
2. பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுசுகாதார நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்ககை தொடர்ந்ததையும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 108**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 109**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரம் நாகணம்பட்டியில் அமைந்துள்ள உரம் தயாரிக்கும் நுண் உரக்குடில் மையத்தில் Shredding Machine கன்வேயர் பெல்ட் பழுதடைந்து இயந்திரம் இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி இயந்திரத்தின் கன்வேயர் பெல்ட் மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து பொருத்த விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஜெயலட்சுமி இன்ஜினியரிங் லேத், ஒட்டன்சத்திரம் | மாரிமுத்து லேத் வெல்டிங் (ம) பிளமிங் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் | முருகன் ரீவைண்டிங், வயரிங், பிளமிங் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | Shredding Machine கன்வேயர் பெல்ட் மற்றும் உதிரி பாகங்கள் | 14500 | 16000 | 15400 |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, ஜெயலட்சுமி இன்ஜினியரிங் லேத், ஒட்டன்சத்திரம் என்பரின் விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுசுகாதார நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 109**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 110**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் முகப்பில் அரசின் தைத்திங்கள் தமிழர் பெருமை விளம்பர பலகை பொருத்த விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணிக்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | Chenthoor Aathavan, Dindigul | Saaraa Crafts, Dindigul | Captain Graphics, Dindigul |
|---|---|---|---|---|
| 1 | அரசின் தைத்திங்கள் தமிழர் பெருமை விளம்பர பலகை பொருத்தும் பணி | 24000 | 25000 | 28000 |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள, Chenthoor Aathavan, Dindigul என்பரின் விலை விகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 110**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 111**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24371/2011/ஐ.டி., நாள்.17.11.2022 வரி மற்றும் வரியற்ற இனங்களில் UTIS module –ல் சம்மந்தப்பட்ட சொத்து உரிமையாளர்களின் குடும்ப அட்டை (Ration Card), பான் கார்டு (Pan Card) மற்றும் GST எண் இணைக்கும் பணியினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து வரி விதிப்பு உரிமையாளர்களும் அறிந்து கொள்ளும் வகையில் நாளிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, விளம்பரம் செய்வதற்கும் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 111**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 112**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2016/ஐ.டி., நாள்.03.12.2022-ஐ அனைத்து நகராட்சிகளிலும் கணினி வரி வசூல் மையத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர்களிடமிருந்து வழங்கப்பட்டுள்ள ஒட்டன்சத்திரம்நகராட்சியின் Band with cast, VPN (BSNL) இனணப்புக்கு 01.04.2022 முதல் 30.09.2022 வரை ஒட்டன்சத்திரம் நகராட்சியால் செலுத்த வேண்டிய ரூ.96,590/- கட்டணம் செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட Band with cast, VPN (BSNL) இனணப்பு இந்நகராட்சி கணினி வரி வசூல் மையத்தில் பயன்படுத்தப்பட்டு வருவதால், மேற்படி கட்டணத்தினை Account Officer (Cash) BSNL, TN Circle என்ற நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்,
2. வரி வசூல் பணிகளின் முக்கியத்துவம் கருதி, மேற்கண்ட தொகை ரூ.96,590/- ஐ நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, Account Officer (Cash) BSNL, TN Circle என்ற நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 112**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 113**

திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள், ந.க.எண்.6862/2022/ஊ.வ10, நாள்.15.12.2022-இன்படி, நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் பயன்படுத்தப்பட்டு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை அரசு கருவூலகத்திலிருந்து பெற்று திண்டுக்கல் நேருஜி நினைவு மாநகராட்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், உள்ள இருப்பு அறையில் ஒப்படைக்கவும், இருப்பு அறையில் பணிபுரியும் அலுவலர் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கான உணவு மற்றும் கூலி செலவினங்கள் நகராட்சி மூலம் வழங்க

உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாக்கு பதிவு இயந்திரங்களை ஒட்டன்சத்திரம் கருவூலகத்திலிருந்து பாதுகாப்பாக எடுத்துச்சென்ற (வாகனங்கள் உட்பட) வகையில் மொத்த செலவினம் ரூ.21,250/- நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்,
2. திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 384**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 114**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஈப்பு வாகன எண்.TN 57 AW 4037-க்கு வாகனத்தின் ஸ்டிக்கர்கள் மற்றும் கண்ணாடிகளில் குளிரூட்டும் காகிதம் ஒட்டுதல் மற்றும் ஈப்பு வாகனம் சீராக இயங்க இன்ஜின் ஆயில், ஏர் பில்டர் மாற்றுதல், சிறு பழுதுகள் போன்றவை சரி செய்யும் பணிகள் மேற்கொண்டமைக்காக, கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கருடா ஸ்டிக்கர், ஒட்டன்சத்திரம் | 4950.00 |
| 2 | ரமணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், தாராபுரம் | 14375.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஈப்பு வாகனத்தின் பயன்பாட்டு அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மேற்படி நிறுவனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 114**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 115**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12-வது சொசைட்டி காலனி பகுதியில் பாலங்கள் மற்றும் வடிகால் சிதலமடைந்து பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதால், மேற்படி பகுதியில், சிதலமடைந்த பாலங்கள் மற்றும் வடிகால் சரிசெய்யும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.

2. போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் சுகாதார நலன் கருதி, மேற்படி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 115</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 116</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளரால் 2022-2023-ஆம் ஆண்டுக்கான 15.10.2022 முதல் 20.01.2023 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண்.RF0644 முதல் RF0896 முடிய, WS0093 முதல் WS0138 முடிய நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 116</u>**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/-க.திருமலைசாமி,
நகர்மன்ற தலைவர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி